Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 28

வியாழக்கிழமை
25 டிசெம்பர் 2025

மார்கழி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

'அன்புசால் வாசகர்கள்,
விநியோகஸ்தர்கள்,
விளம்பரதாரர்கள்
அனைவருக்கும் உதயனின்
கிறிஸ்மஸ் வாழ்த்துகள்'



யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் நேற்று பாலன் பிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன.

## பண்டிகைக்காலத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.25
கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இலங்கையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளன.
வழிபாட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் »15

## மண்கும்பானில் மணல் அகழ்வு; நடவடிக்கை எடுப்பதில் தாமதம்

### பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ.25
மண்கும்பான் பிரதேசத்தில் சிலரால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத் »15

# தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோதமானதே!

## அரசு தலையிட்டு தீர்வு வழங்காவிட்டால் தமிழ் மக்களுடன் நிற்க நேரிடும்

### நயினாதீவு நாகவிகாராதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25
யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு, தையிட்டிப் பகுதியில் தற்போது விகாரை அமைக்கப்பட்டுள்ள காணி பொதுமக்களுக்கு சொந்தமானது என்று நயினாதீவு நாகவிகாரையின் விகாராதிபதி நவதலகல பத்ம தேரர் தெரிவித்துள்ளார். »15



## கட்டுப்பாட்டை இழந்த கார் இடித்துச்சரித்தது கடையை

### நவாலியில் மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ.25
பொலிஸாரால் துரத்தி வரப்பட்ட கார் கட்டுப்பாட்டை இழந்து ஏற்படுத்திய விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நேற்று இரவு நவாலி, மூத்தநயினார் ஆலயத்துக்கு முன்பாக நடந் »15

## இன்பருட்டி கடற்கரையில் கரையொதுங்கிய சடலம்!

யாழ்ப்பாணம், டிசெ.25
பருத்தித்துறை - இன்பருட்டி கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் நேற்றுக் கரை »15

## 2,77,000 விவசாயிகள் டித்வாவால் பாதிப்பு

கொழும்பு, டிசெ.25
டித்வா சூறாவளியால் சுமார் 2 லட்சத்து 77 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப் பட்டுள்ளனர் என்றும், மீன்பிடித்துறையில் 20.5 மில்லியன் முதல் 21.5 மில்லியன் ரூபா வரையான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்பு »15

## 2026 கல்வியாண்டு ஜனவரி 5 ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.25
அனைத்துப் பாடசாலைகளிலும் 2026ஆம்ஆண்டுக்கான முதலாம் தவணையின் முதலாம் கட்டம் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று கல்வி, உயர்கல்வி மற்றும் »15

**பண்டிகைக் காலத்தில் விசேட போக்குவரத்து!**
விரிவு பக்கம்:-05

**3,74,000 தொழிலாளர்கள் பேரிடரால் வேலையிழப்பு**
விரிவு பக்கம்:-03

## யாழ். பண்ணைக் கொல்களத்தில் காதுப்பட்டியற்ற 15 மாடுகள் மீட்பு

யாழ்., டிசெ.25
யாழ். பண்ணைப் பகுதியிலுள்ள யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட மாடுகளை இறைச்சியாக்கும் கொல்களத்தில் காதுப் பட்டிகள் »15



## ஆழ்கடல் மீன்பிடிப்படகில் சிக்கிய பெருந்தொகை போதைப்பொருள்!

### 200 கோடி ரூபா பெறுமதி என மதிப்பு

கொழும்பு, டிசெ.25
இலங்கையின் தெற்குப் பகுதியில் கைப்பற்றப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகில் இருந்து பெருந்தொகையான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன. இவற்றின் சந்தைப் பெறுமதி 200 கோடி ரூபா வரை இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.
ஆழ்கடல் மீன்பிடிப் படகொன்றில் போதைப்பொருள் கடத்தப் படுகின்றது என்று கடற்படை »15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4295 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 14 35 70 80 |
| விசேட எழுத்து | G |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1362 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 19 21 30 39 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0321 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 2 1 5 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2401 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 25 42 64 80 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6053 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 0 9 1 5 7 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2083 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 18 46 70 79 |
| விசேட எழுத்து | N |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0169 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 32 40 50 |

# அதிகாரிகளின் அசமந்தப்போக்கால் மீனவர்களின் நிவாரணம் இழுபறி!

## மன்னாரில் குற்றச்சாட்டு

**மன்னார்,டிசெ.25**

**மன்னார் மாவட்ட மீனவர்கள் மீது ஜனாதிபதி கரிசனை கொண்டுள்ளபோதும் அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் நிவாரணப்பணிகள் தாமதமடைகின்றன என்று மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் மொஹமட் ஆலம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்ட 12 ஆயிரம் மீனவர்களுக்குமான உலர் உணவுப்பொதிகளை விசேடமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணித்திருந்தார். அத்தோடு ஜனாதிபதி செயலகத்திலும் அது தொடர்பாகப் பேசப்பட்டு அனைத்து மீனவர்களுக்குமான உலர் உணவுப் பொதிகள் மன்னார் மாவட்டத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

12,000 மீனவர்களில் இது வரையில் 6,000க்கு உட்பட்ட மீனவர்களின் பெயர்ப்பட்டியல் கடற்றொழில் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டுவருகின்ற இந்த வேளையிலே கடற்றொழிலாளர்களுக்கு என விசேடமாக அனுப்பப்பட்ட பொதிகளை ஏற்கனவே உலர் உணவு பெற்ற மீனவர்களுக்கு வழங்காமல் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு வழங்கப்படப்போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாழ்வாதாரத்தை இழந்த மீனவர்களுக்கு விசேடமாக அந்தப் பொதிகளை வழங்குமாறே ஜனாதிபதி பணித்திருந்தார்.

அனர்த்தங்கள் ஏற்படும்போது முதலில் பாதிக்கப்படுபவர்கள் மீனவர்கள்தான். இதனை பெயர்ப்பட்டியலிலுள்ளஅனைத்து மீனவர்களுக்கும் வழங்குவதில் திணைக்களத் தலைவர்களுக்கு உள்ள இடையூறு என்ன? - என்றார். (ச-213,56)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0761 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 4 7 4 0 4 2 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3027 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 01 09 33 40 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 19 31 69 72 |
| வெற்றி வாரம் | 5188 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0857 |
| வெற்றி இலக்கம் | 18 23 43 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| தினம் | புதன்கிழமை |
| மீனம் | |
| வெற்றி இலக்கம் | 11 19 21 31 |
| சீட்டிழுப்பு வாரம் | 4739 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கம் | 11 16 26 63 |
| வெற்றி வாரம் | 2203 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 24.12.2025 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 12 19 23 37 |
| வெற்றி வாரம் | 2853 |

## ரூபா வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 25

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த திங்கட்கிழமையுடன் ஒப்பிடுகையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 305 ரூபா 76 சதமாகப் பதிவாகியுள்ளது. அத்துடன் விற்பனை விலை 313 ரூபா 35 சதமாகப் பதிவாகியுள்ளது. (ச-இ)



## தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்புடன் தமிழ்த் தேசியப் பேரவை சந்திப்பு

முல்லைத்தீவு, டிசெ. 25

தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்புடன் தமிழ்த் தேசியப் பேரவையினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சென்னையில் சந்திப்பில் ஈடுபட்டனர்.

சந்திப்பில் இலங்கையில் நிறைவேற்றப்படவுள்ள ஈழத்தமிழர்களின் நலன்களுக்கு எதிரான ஏக்கிய ராஜ்ஜிய அரசியலமைப்பைத் தடுத்து நிறுத்துவதற்காக இந்திய அரசினூடாக அழுத்தங்களை வழங்கவேண்டுமெனவும், ஈழத்தமிழ்க் கடற்றொழிலாளர்களின் அவலங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டுமெனவும் தமிழ்த்தேசியப் பேரவையினர் தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பினரிடம் வலியுறுத்தினர். (ச-66)



## மின் ஒளியில் ஜொலிக்கும் யாழ்.மணிக்கூட்டுக் கோபுரம்

### ஆளுநர் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

நத்தார் மற்றும் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட யாழ்.மணிக்கூட்டுக் கோபுரம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மின் அலங்காரத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் இயற்கைப் பேரிடரால் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் அஞ்சலிச் சுடரை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-66)



## கஞ்சாச்செடி வளர்த்தவர் வவுனியாவில் கைது!

வவுனியா,டிசெ.25

வவுனியா மடுக்கந்தப் பகுதியில் காணி ஒன்றில் கஞ்சாச் செடி ஒன்றைப் பயிரிட்டு வளர்த்த ஒருவரை வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் போதைத்தடுப்புப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதே பகுதியை சேர்ந்த 32 வயதான ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைதுநடவடிக்கை வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரகீத் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 3,74 ,000 தொழிலாளர்கள் பேரிடரால் வேலையிழப்பு

## சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம் தகவல்

**கொழும்பு, டிசெ. 25**
**'டித்வா' காரணமாக இலங்கையில் 3 இலட்சத்து 74 ஆயிரம் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளதாகச் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

கடந்த நவம்பர் மாத இறுதியில் ஏற்பட்ட புயல் மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு காரணமாகத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதனால் மாதமொன்றுக்கு 48 மில்லியன் அமெரிக்க டொலர் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு மதிப்பிட்டுள்ளது.
விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகளுக்கு இதனால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
குறிப்பாக நெல் பயிரிடப்பட்ட நிலங்களில் 23 சதவீதம் வரை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. தேயிலைத் துறையில் 35 சதவீத இழப்பு ஏற்பட்டுள்ளதுடன், தேயிலை உற்பத்தியில் 70 சதவீத பங்களிப்பை வழங்கும் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் இந்த அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் தனது மதிப்பீட்டில் சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## மந்தபோசனைக் குறைபாடுகள்: யுனிசெப் அமைப்பு நன்கொடை

கொழும்பு, டிசெ. 25
'டித்வா' சூறாவளியை அடுத்து ஏற்பட்ட பேரனர்த்தத் மந்தபோசணை குறைபாட்டுக்கு முகங்கொடுத்திருக்கும் சிறுவர்களுக்கு உதவும் நோக்கில் 20,000 கிலோகிராம் போசணைப்பதார்த்தம் யுனிசெப் அமைப்பினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.
போதியளவு போசணைப்பதார்த்தங்கள் அடங்கிய உணவுப்பொருள்கள் கிட்டாமையினால் சிறுவர்கள் மத்தியில் மந்தபோசணை நிலை அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு காணப்படுவதாக சுகாதாரத்துறை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இந்தநிலையில் 6 மாதக் குழந்தைகள் தொடக்கம் 5 வயது வரையான சிறுவர்கள் மந்தபோசணையினால் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான போசணைப் பதார்த்தம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள யுனிசெப் அலுவலக அதிகாரிகளால் சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கையளிக்கப்பட்டது. (ச-இ)



## வல்வெட்டித்துறையில் டெங்குப் பரிசோதனை

யாழ்ப்பாணம்,டிசெ.25
வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்குக் கட்டுப்பாட்டு விசேட பரிசோதனை நேற்று முன்னெடுக்கப்பட்டது.
இதன் போது 514 ஆதனங்கள் பரிசோதிக்கப்பட்டன. 133 இடங்களில் டெங்கு நுளம்பு பரவும் ஏதுநிலை அடையாளம் காணப்பட்டது. அதனடிப்படையில்15 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், 13 குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை நகரசபையினர், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையினர், மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தினர் இணைந்து வீடுகள் தோறும் பரிசோதனைகளை மேற்கொண்டனர். (க-100)



திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு, காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்குச் செல்லும் வீதி, பிரதேசசபையால் துப்புரவு செய்யப்படுகின்றது. (க-17)

## வட மாகாண மகளிர் அமைச்சால் 253 பெண்களுக்கு தொழிற்பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.25
வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின், பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 253 பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு, சந்தைப் பகுப்பாய்வுப் பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டன. யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் சந்தைப்படுத்தல் துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி சிவானி சண்முகதாஸ் தலைமையிலான 4 பேர் கொண்ட விரிவுரையாளர் குழாம் பயிற்சிகளை வழங்கியது. இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 43 பேர், வவுனியாவைச் சேர்ந்த 36 பேர், மன்னாரைச் சேர்ந்த 57 பேர், கிளிநொச்சியைச் சேர்ந்த 56 பேர், முல்லைத்தீவைச் சேர்ந்த 61 பேர் என 253 பேர் பயிற்சிகளைப் பெற்றுச் சான்றிதழ் பெற்றுள்ளனர். (க)

## உயிரைக் கையில பிடிச்சபடி...! -1

ஆலையில்லா ஊருக்கு இலுப்பம்பூவைச் சக்கரையாப் பாவிக்கலாம். ஆனால் அரளிப்பூவைப் பாவிச்சால் ஆபத்தாப்போடும். அதைமாதிரித்தான் போக்குவரத்தும் வசதி வாய்ப்புகளும் குறைஞ்ச இடங்களுக்கு வேலைசெய்யிறதுக்கு எல்லாரும் பஞ்சிப்படுறதால, அங்க போக ஓமெண்டுறவையை வைச்சுத்தான் எல்லாத்தையும் நடத்தவேண்டியிருக்குது. மற்றவேலையளுக்கு இப்பிடி பதிலீடா ஆக்களைப் போடலாம். ஆனால் சிலவேலையளுக்கு அந்தத்துறையில கெட்டித்தனம் காட்டினவையைத்தான் போடலாம். அதுவும் டாக்குத்தர் வேலை உயிரோட சம்பந்தப்பட்டது எண்டதால, கண்டவையையும் போடேலாது தானே. எங்கடையாக்களுக்கு பொதுவாவே ஒரு குணம் இருக்கு. அவைக்கு வேலையும் வேணும், வீட்டோட இருக்கவும் வேணும். அந்தக் குணம் எப்பவும் முன்னுக்கு நிக்கிறதால, வெளிமாவட்டங்களிலை போய் வேலை செய்யமாட்டினம். சிலவேளையளில தங்கட ஏரியாவிலையும் வசதியள் குறைவெண்டால் அங்கையும் வேலை செய்யமாட்டினம். வெளிநாடு, கொழும்பு எண்டு போடுவினம். கன ஆஸ்பத்திரியளில டாக்குத்தர்மார் இல்லாமல் சனங்கள் அந்தரப்படுகினம்.

இந்தநிலைமையில சிங்கள டாக்குத்தர்மாரும், நேர்ஸ்மாரும் தான் இஞ்சத்தை ஆஸ்பத்திரியளில வேலை செய்யவருகினம். அதால இப்ப ஆரும் வருத்தமெண்டு ஊர்வழிய உள்ள ஆஸ்பத்திரிக்குப் போறதெண்டால் சிங்களமும் தெரிஞ்சிருக்கோணும். அப்பதான் என்ன வருத்தம் எண்டு வடிவா டாக்குத்தர்மாருக்குச் சொல்லமுடியும். இல்லாட்டி எங்கட அரைகுறைச் சிங்களமும், அவையின்ர அரைகுறைத் தமிழும் சேர்ந்து கதகளி ஆடி, கடைசியில உயிருக்கே உலை வைச்சிடும். அதைவிட இன்னொரு விசயமும் இருக்கு. தங்கட இடத்தில வேலை செய்யாமல், எங்கட இடத்துக்கு சிங்கள டாக்குத்தர்மார் வாறதை நாங்கள் எல்லாரும் பெரிய தியாகமாப் பாக்கிறம். அரைவாசிப்பேர் அப்பிடி சேவைசெய்யிற நோக்கத்தோடதான் வருகினம். அதில மாற்றமில்லை. ஆனால் கொஞ்சப்பேர் அங்கயுள்ள ஆஸ்பத்திரியளில வேலைசெய்ய ஏலாதெண்டு தான் இஞ்ச வருகினமாம். அவையள் ரஷ்யாவில மெடிசின் படிச்சு வந்தவையெண்டதாலதான் முதலில தமிழ் ஏரியாவில போய் வேலை செய்தால் தான், அதுக்குப் பிறகு உங்கட ஏரியாவில வேலை செய்ய விடலாம் எண்டு மேலிடத்தில இருந்து அனுப்புகினமாம். அதாலதான் அவைக்கு விருப்பமில்லாட்டியும் இஞ்ச வந்து வேலை செய்யினமாம் எண்டு ஒரு கதை உலாவுது.

இப்பிடி இஞ்சவாற சில சிங்கள டாக்குத்தர்மார் வேண்டாவெறுப்பா வேலை செய்யிறதால , ஆஸ்பத்திரிக்குப் போறவை உயிரைக் கையில பிடிச்சுக்கொண்டு போகவேண்டியிருக்காம். கிட்டடியில வன்னியில இருக்கிற ஒரு ஆஸ்பத்திரிக்குச் சின்னப்பிள்ளையொண்டுக்கு அலர்ஜிக் எண்டு கொண்டுபோயிருக்கினம். அந்தப் பிள்ளைக்குப் பெரிசா வருத்தமொண்டு மில்லை. அண்டைக்கு ஏதோ மாட்டிறைச்சி சாப்பிட்டது ஒத்துக்கொள்ளாமல் உடம்பு தடிக்க வெளிக்கிட்டதுதான் பிரச்சினை. அதை அந்தப் பிள்ளையின்ர வீட்டுக்காரர், அங்க நிண்ட சிங்கள டாக்குத்தரிட்ட சொல்லியிருக்கினம். அவருக்கு என்ன விளங்கிச்சுதோ தெரியேலை. அவர் கொஞ்சம் ஓவர்டோஸான மருந்தை ஊசியில ஏத்திப் போட்டிருக்கிறார். அவ்வளவு தான், கொஞ்சத்திலையே பிள்ளை மயங்கிவிழுந்து உயிர் போட்டுது. ஆனால் அதுக்குப் பிறகு அந்த டாக்குத்தர் செய்தது தான் ஆகக்கேவலமான வேலை. அது என்னெண்டு நாளைக்குப் பாப்பம்.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற் பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள்வழியில் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் குல தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயல்படவும். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் வீண் விவாதம் ஏற்படக் கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளிக்கத்தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றி மகிழும் வாய்ப்பு உண்டாகும். மாலையில் பள்ளி, கல்லூரிக் கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**கன்னி:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். முடிந்தவரை மற்றவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**துலாம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் நன்மை ஏற்படும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** உற்சாகமான நாள். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். ஒரு சிலருக்கு வெளியூரில் இருந்து எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கக்கூடும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கிடைப்பதால், செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்குத் தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

## ஆறுமுகநாவலர் குருபூசை விழா

யாழ்ப்பாணம்,டிசெ.25
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், இந்து ஆன்மிகப் பிரசாரகர் சங்கமும் இணைந்து நடத்தும் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு நல்லைத் திருஞானசம்பந்தர் கலா மண்டபத்தில் இடம்பெறும். நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று, நாவலர் பெருமானின் திருவுருப்படம் ஊர் வலமாக நல்லை ஆதீனக் கலா மண்டபம் எடுத்துவரப்படும். தொடர்ந்து சைவப்புலவர் கனகதுர்க்கா கனகரத்தினத்தின் சொற்பொழிவும், மாணவர்களின் கலை நிகழ்வும், குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும். கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன் கலந்து கொள்வார். (க)

## பெருங்கதை

யாழ்ப்பாணம்,டிசெ.25
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதத்தின் இறுதி நாள் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சிறப்பு வழிபாடுகளும் இடம்பெறும். தொடர்ந்து மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை மற்றும் திருவூஞ்சல் சுவாமி வீதிவலம் வருதல் இடம்பெறும். (க-17)

## அரசியல் கருத்தரங்கு

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தலைமை வழிகாட்டி கே.ஏ சுப்பிரமணியத்தின் 36ஆவது ஆண்டு நினைவு அரசியல் கருத்தரங்கு, எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கே.கே.எஸ்.வீதி கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், தேசிய இனங்களின் பிரச்சினைகளும், தீர்வுக்கான முன்மொழிவுகளும் தொடர்பாக டே.சுரேன், மு.மயூரன், கே.ஜிந்தீசன், கா.செ.கதிர்காமநாதன் ஆகியோர் உரையாற்றுவர். (க-159)




யாழ்.செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒளிவிழா கடந்த செவ்வாய்க்கிழமை செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (ச-17)

## திருவெம்பாவை

யாழ்ப்பாணம்,டிசெ.25
கைதடி கோயிலாக்கண்டி வேலம்பிராய் கண்ணகி அம்பாள் ஆலயத்தில் இன்று முதல் எதிர்வரும் 3ஆம் திகதி வரை பத்து தினங்கள் திருவெம்பாவை இடம்பெறும். பத்து தினங்களும் காலை 7.30 மணிக்கு அபிஷேகத்துடன் பூசைகள் இடம்பெறும். பத்தாம் நாள் திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பித்து, அம்பாள் உள்வீதியுலா இடம்பெறும். (க-159)

••••••

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில், திருவெம்பாவை உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு சிறப்புப் பூசைகளுடன் ஆரம்பமாகும்.

••••••

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் திருவெம்பாவை உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 5 மணிக்கு சிறப்புப் பூசைகளுடன் ஆரம்பமாகும்

•••••

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவை உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு சிறப்புப் பூசைகளுடன் ஆரம்பமாகும். (க-17)

## யாழ்.நகரில்
## தெற்கு வியாபாரிகளால் புத்தாண்டு வியாபாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.25
நத்தார் மற்றும் புத்தாண்டுப் பண்டிகைக்காலத்தை முன்னிட்டு யாழ்.நகரப்பகுதியில் நடைபாதை கடை வியாபாரங்கள் களைகட்டியுள்ளன.
தெற்கேயிருந்து நடைபாதை வியாபாரிகள் வாகனங்கள் மூலம் உடுபுடைவைகளை எடுத்து வந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.
வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக நடைபாதை வியாபாரிகள் கொட்டகைகள் அமைத்து வியாபாரத்தில் ஈடுபட அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
அதேவேளை புத்தாண்டு கொள்வனவுக்காக அதிகளவான மக்கள் யாழ்.நகரப்பகுதிக்கு படையெடுத்துவருகின்றனர். (ச-17)

## 70 விவசாயிகளுக்கு வாயுத் துப்பாக்கிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.25
தென்மராட்சிப் பிரதேசத்தில் குரங்குகளின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த 60 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 70 விவசாயிகளுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.
குரங்குகளால் பயிர்வகைகள், பழச் செய்கைகள் பாதிக்கப்படுகின்றது என்று பிரதேச மக்கள் மற்றும் அமைப்புக்களால் நீண்டகாலம் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்தத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.
துப்பாக்கி வழங்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலும் தொடர்பு இலக்கமும் அந்தந்த கிராம அலுவலர்களின் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (க-9)

## திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணம்,டிசெ.25
யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் 21ஆவது திரைப்படக்காட்சி எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு 18/2, அம்மன் வீதி, கந்தர்மடத்திலுள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இடம்பெறவுள்ளது. காட்சி 1 இல் 'நித்விக் கடக்: நெறியாளரின் உருவப்படம்' என்ற ஆங்கில ஆவணப்படமும், காட்சி 2 இல் 'அஜாந்திரிக்' என்ற வங்காளக் கதைப்படமும் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் இலவசமாகத் திரையிடப்படும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# காரிருளில் பேரொளியாக.....!

*காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது (எசா 9:2)*

இன்று கிறிஸ்மஸ் பெருவிழா!. பண்டிகைகளையும் கொண்டாட்டங்களையும் பெரிதாகக் கண்டு கொள்ளாமல் - சம்பிரதாயபூர்வ நாளாகக் கடந்து போகும் வெற்று மனோநிலைக்குத் தமிழர் தாயகம் தள்ளப்பட்டு ஒன்றரைத் தசாப்தங்கள் கடந்து விட்டன. இந்த நீண்ட நெடிய காத்திருப்புக் கலாசாரத்தின் மற்றொரு அம்சமாகவே இன்றைய பாலன் பிறப்பும் அமைந்திருக்கின்றது என்றால், அந்தக் கூற்று விவாதப்பொருளாக இருக்கப்போவதில்லை.

இயேசு கிறிஸ்து பிறந்தபோது பெத்லகேம் நகரில் ஒரு விடிவெள்ளி தோன்றியது. அது 'மனுக்குலத்தை மீட்கும் இரட்சகரின் பிறப்புக்கான சான்று' என்று முன்னறிவிக்கப்பட்டதால், அந்த விடிவெள்ளியை தமது விடியலாகவும் - மீட்பின் சின்னமாகவும் முன்னோர்கள் கண்டுகொண்டனர். இதே தளத்தில்தான் தமிழர்களாகிய நாமும் இன்றைய நாளை எதிர்கொள்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம், அரசியற்கைதிகளின் விடுதலை, சிங்கள பௌத்தத் திணிப்புகள், காணி ஆக்கிரமிப்பு என எங்கும் எம்மைச் சுற்றி இருண்மைநிலை நீடித்த நிலையில், அண்மையில் பேரழிவை ஏற்படுத்திய டித்வா புயல் எம்மத்தியில் இருந்த இருளின் செறிவை பல மடங்காக உயர்த்தியுள்ளது. எனவே, இவ்வாறானதொரு பின்னணியில் 'மீட்பின் ஒளி' தமிழர்களுக்கும் இன்று தேவைப்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

இதேவேளை, இந்தப் பாலன் பிறப்பை இன்னொரு தளத்தில் இருந்து சிந்திக்கவேண்டியவர்களாகவும் நாமிருக்கின்றோம். இறைமகனான இயேசு கிறிஸ்து இவ்வுலகுக்குத் தம்மை வெளிப்படுத்திய விதம் முழுவதும் வேறுபட்டது. இயேசுக் கிறிஸ்து நினைத்திருந்தால் மாடமாளிகைகளிலும், கூடகோபுரங்களிலும் பிறந்திருந்திருக்கலாம். பல்லாயிரம் வானதூதர்கள் புடைசூழ ஓர் இராஜனைப்போன்று அவர் மண்ணுலகில் அவதரித்திருக்கலாம். ஆனால், அவர் தேடிக் கொண்டது ஒரு மாட்டுத்தொழுவம். ஆடு, மாடுகளுக்கு உணவளிக்கும் தீவனத்தொட்டியில் வைக்கோல்களில் நடுவில்தான் அவர் வந்துதித்தார். பிறப்பில் ஏழ்மையையும், வாழ்வில் அன்பையும் பகிர்தலையும்தான் இயேசுக் கிறிஸ்து வெளிப்படுத்தினார். இயேசு கிறிஸ்து கற்பித்துச் சென்ற 'ஏழ்மை அன்பு-பகிர்தல்' இம்மூன்றையும் இன்று கட்டாயமாகப் பிரதிபலிக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.

இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்துகிடக்கின்றது. எத்தனையோ குடும்பங்கள் ஒரு வேளை உணவுக்கே அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றன. டித்வாவால் வாழ்விழந்து - வருமானம் இழந்து நிர்க்கதியானவர்களின் நிலை மேலும் பரிதாபத்துக்கு உரியதாக அமைந்துள்ளது. ஆதலால், ஏழ்மையைச் சூடிக்கொண்டு இல்லாதோருடன் பகிர்ந்துகொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத்தனம் ஏற்பட்டிருக்கின்றது. அதுதான், இறைவல்லமையுள்ளவர் பிறக்க விரும்பிய அந்தத் தீவனத்தொட்டிக்குச் செல்லும் உண்மையான அழைப்பாகும். அத்துடன், வாழ்வதற்குப் போராடிக்கொண்டிருக்கும் ஏழைகளில் இயேசுவைத் தேடுவதுதான் அர்த்தமுள்ள நத்தாராகவும் அமையும்.


*'மிகச்சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்' (மத்தேயு 25:41)*

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

நம்பிக்கை நிறைந்த ஒருவர்
யார் முன்னேயும்,
எப்போதும் மண்டியிடுவதில்லை.

–அப்துல் கலாம்–




# பண்டிகைக் காலத்தில் விசேட போக்குவரத்து!



**கொழும்பு, டிசெ. 25**
**பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்துச் சேவைகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் இடம்பெறுகின்றன என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.**

நீண்ட தூரப் பயணங்களுக்காகக் கூடுதலாக 80 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. விடுமுறைக் காலத்தில் சுமுகமான பயணத்தை உறுதிசெய்வதற்காக பயணிகளின் தேவையின் அடிப்படையில் பேருந்து சேவைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை நத்தார்ப் பண்டிகை, பாடசாலை விடுமுறை மற்றும் வருட இறுதியில் காணப்படும் நீண்ட விடுமுறையை முன்னிட்டு மேலதிக ரயில் சேவையை ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது. மருதானையிலிருந்து மாத்தறை நோக்கி விசேட கடுகதி ரயில் ஒன்று பயணிக்கவுள்ளது. மேலும், கொழும்பு கோட்டை-காங்கேசன்துறை இடையிலான நகரங்களுக்கிடையிலான ரயில் சேவை எதிர்வரும் 25 மற்றும் 28 ஆம்திகதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை செயற்பாட்டு அதிகாரி சங்க வீரசூரிய தெரிவித்தார். (ச-இ)

## குடு ரொஷான் துப்பாக்கியுடன் கைது

கொழும்பு, டிசெ. 25
பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த போதைப் பொருள் கடத்தல்காரரான 'குடு ரொஷான்' என்பவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு மாளிகாவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



## மண்சரிவு அபாயம் நீங்கவில்லை

கொழும்பு,டிசெ.25
மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கைகள் நீக்கப்பட்டபோதிலும், அந்த இடங்களில் இன்னும் ஆபத்து நீங்கவில்லை எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. மழை நிலைமை குறைவடைந்ததன் காரணமாகச் சிவப்பு எச்சரிக்கை நீக்கப்பட்டிருந்தாலும், அதிகாரிகள் வந்து குறித்த ஆபத்தான இடங்களைப் பரிசோதிக்கும் வரை பொதுமக்கள் அந்த இடங்களுக்குச்செல்லவேண்டாம்என அந்த அமைப்பின் சிரேஷ்ட விஞ்ஞானி ஹசலி சேமசிங்க பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)



## தபாலில் அனுப்பப்பட்ட போதைப்பொருள் மீட்பு


தபாலில் அனுப்பப்பட்ட 60 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் பொதி ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தப் போதைப்பொருள்கள் தாய்லாந்தில் இருந்து இலங்கைக்குத் தபாலில் அனுப்பப்பட்டவை எனத் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பாக தெமட்டகொடையைச் சேர்ந்த 31 வயது சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

## 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டத்தில் திருத்தம்

கொழும்பு, டிசெ.25
பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளால் கல்வி நடவடிக்கைகளுக்குத் தடங்கல் ஏற்படும் மாணவர்களுக்கு உதவும் நோக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட 'சுரக்ஷா' மாணவர் காப்புறுதித் திட்டத்தை, திருத்தங்களுடன் 2025/26ஆம் ஆண்டில் தொடர்ந்து முன்னெடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரான பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு, 2025/26 ஆம் ஆண்டில் சில திருத்தங்களை உள்ளடக்கி இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், அது தொடர்பான ஏற்புடைய சுற்றுநிருபங்கள் மற்றும் ஆலோசனைகளை வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை - மார்கழி 11
26.12.2025
சுபநேரம் : 06.27 - 07.57
ராகுகாலம் : 10.57 - 12.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பௌத்த துறவிக்கு ஒரு நீதி சைவத் துறவிக்கு ஒரு நீதியா?

## ஐக்கிய தமிழர் ஒன்றியம் கண்டனம்

**யாழ்ப்பாணம்,டிசெ.25**

**தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பெற்ற விகாரைக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் வேலன் சுவாமிகள் மீது பிரயோகிக்கப்பட்ட கைதுபோல், ஒரு பௌத்த துறவி மீது பொலிஸாரால் மேற்கொள்ளமுடியுமா? பொலிஸாரின் இந்த ஜனநாயக விரோதச் செயற்பாட்டை இனவாதமாகவே நோக்கவேண்டியுள்ளதுடன் பொலிஸாரின் மிலேச்சத்தனமும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.**

இவ்வாறு ஐக்கிய தமிழர் ஒன்றியம் கண்டன அறிக்கை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டிருந்த, வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர், வலி.வடக்குப் பிரதேசசபை உறுப்பினர்கள் பலரையும் அடித்து இழுத்துச் சென்ற பொலிஸாரின் மிலேச்சத்தனமான கைது மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

வேலன் சுவாமிகள் மீது மேற்கொண்ட தாக்குதல் போல், கைது போல், ஒரு பௌத்த துறவி மீது பொலிஸாரால் மேற்றொள்ள முடியுமா?

குற்றங்களைப் புரிந்தவர்களைக் கூடக் கைதுசெய்யும் போது, அவர்களது மனித உரிமைகள் பாதிக்கப்படாமல் உடல் துன்புறுத்தல்கள் இடம்பெறா வண்ணம் கைதுசெய்யப்பட்ட வேண்டும் என மனித உரிமைகள் சட்டம் கூறுகின்றது.

ஆனால் மனித உரிமைச் சட்டங்களை மதிக்காத பொலிஸார், மிலேச்சத்தனமாக போராட்டக்காரர்களைக் கைதுசெய்திருப்பதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாது- என்றுள்ளது. (ச)

## தையிட்டிச் சம்பவத்துக்கு

# பரு. நகரசபையில் கண்டனத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

அண்மையில் தையிட்டியில் வேலன் சுவாமிகள் உட்பட 5 பேர் கைதுசெய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பருத்தித்தறை நகரசபையின் மாதாந்த அமர்வில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பருத்தித்தறை நகரசபையின் அமர்வு தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் தலைமையில் நேற்று ஆரம்பமானது.

அமர்வில் 2026ஆம் ஆண்டு நடமாடும் சேவைகளுக்கான அனுமதி, வாகன திருத்தங்களுக்கான அனுமதிகள், மின் இணைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான அனுமதிகள், உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் அண்மையில் ஜனநாயக முறையில் தையிட்டில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் வேலன் சுவாமிகள் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டமை பொலிஸாரின் அராஜகமான செயற்பாடாகும் என்று கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ச-27,100)




# தையிட்டியில் கைதானோரில் இருவர் மருத்துவமனையில்!

யாழ்ப்பாணம்,டிசெ.25

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெற்ற போராட்டத்தின் போது, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை தையிட்டி விகாரைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் கைது செய்யப்படும்போது பொலிஸாரால் கடும் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் வேலன் சுவாமிகள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் தற்போது வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷும் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க-66)



# தையிட்டியில் பொலிஸ் அடாவடி அரசாங்கத்தின் மிலேச்சத்தனம்!

## இந்து மாமன்றம் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

சாத்வீகமாகப் போராடிய மக்களையும் அதில் இணைந்திருந்த இந்து மதகுருவான நல்லூர் ஆதீன மதகுரு தவத்திரு வேலன் சுவாமிகளையும் தாக்கி வாகனத்துக்கு இழுத்துச் சென்று கைது செய்யப்பட்டமை அரசின் மிலேச்சத்தனமான செயற்பாட்டை வெளிக்காட்டுகின்றது.

இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் வெளியிட்டப்பட்ட கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

போர்ச்சூழலில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட தனியார் காணியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ள தையிட்டி பௌத்த விகாரைக்கு எதிராகச் சாத்வீகமாகப் போராடியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் நல்லூர் ஆதீன மதகுரு தவத்திரு வேலன் சுவாமிகளும் மிலேச்சத்தனமாகத் தாக்கி வாகனத்துக்கு இழுத்துச் சென்று கைது செய்யப்பட்டுள்ளார். இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இத்தகைய அமைதியின்மையும் வன்முறைகளும் அடக்குமுறையும் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் திட்டமிடப்பட்டுத் தோற்றுவிக்கப்படுகின்றன.

எனவே இந்த விடயத்தில் தலையிட்டு உடனடி விசாரணை நடத்தி வன்முறையில் ஈடுபட்ட பொலிஸார்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் தையிட்டி சட்டவிரோத பௌத்த விகாரை அமைக்கப்பட்ட நில உரிமையாளர்களின் நியாயமான பிரச்சினையை ஜனாதிபதி தீர்க்கவேண்டும்- என்றுள்ளது. (ச)

# தமிழர்களின் உரிமை ஒடுக்கப்படுவதற்கு மிலேச்சத்தனக் கைதுகள் எடுத்துக்காட்டு

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்ப்பாணம் தையிட்டியில் தமிழ் சிவில் சமூகத் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் முன்னெடுத்த அமைதிப் போராட்டத்தை வன்முறையாக ஒடுக்கிய ஸ்ரீலங்காப் பொலிஸாரின் நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இலங்கையின் புதிய ஆட்சியின்கீழ் 'சீர்திருத்தங்கள்' செய்யப்படுவதாகக் கூறப்படும் போதிலும், தமிழர்களின் உரிமைகள் தொடர்ந்து நசுக்கப்படுவதையும், திட்டமிட்ட நில அபகரிப்புகளையும், மதச் சுதந்திரம் பறிக்கப்படுவதையுமே இந்தச் சம்பவம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது என்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்கக்கோரியும், அங்கு மேலதிகமாகப் புத்தர் சிலைகளை நிறுவும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்தப் போராட்டம் நடைபெற்றது. ஒரு இந்து சமயத் துறவி மீது அரச பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதல் என்பது ஈழம், இந்தியா மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழும் ஒட்டுமொத்த இந்துக்களையும் அவமதிக்கும் செயலாகும். இது தமிழர்களுக்குத் தங்களது நில உரிமைக்காகப் போராடும் அடிப்படை உரிமை கூட மறுக்கப்படுவதைக் காட்டுகிறது.தமிழர் தாயகத்தின் குடித்தொகை மற்றும் கலாசார அடையாளங்களை மாற்றுவதற்காக முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட கொள்கையின் ஒருபகுதியே இதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத இறைவனின் உடனிருப்பை உறுதிப்படுத்தும் கிறிஸ்மஸ்!

தமிழ் நேசன் அடிகளார்



இலங்கை நாடு மீண்டுமொரு தடவை இயற்கையின் சீற்றத்திற்கு உள்ளாகிசின்னாபின்னமாகி, சிக்கிச் சீரழிந்து கிடக்கின்றது. இம்முறை உயிர் இழப்புக்களோடு அளவிடமுடியாத பொருளாதார இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. 1957ஆம் ஆண்டு இலங்கையைத் தாக்கிய வெள்ள அனர்த்தமே இலங்கையைத் தாக்கிய மிகப்பெரும் வெள்ள அனர்த்தமாகக் கருதப்பட்டுவந்த நிலையில், கடந்த நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்;தம் அதையும் தாண்டிய பெருவெள்ளமாக வரலாற்றில் பதிவாகியுள்ளது.

வசதிபடைத்தோர் வசதியற்றோர் என்ற பாகுபாடின்றி நாட்டின் அனைத்துத் தரப்பினரையும் இந்த இடர் பாதித்துள்ளது. சிறுகச்சிறுகச் சேமித்து உழைத்த வீடுவாசல், பொருள் பண்டம் எனப் பலவற்றை பலர் இழந்து நிர்க்கதியாகி உள்ளனர். பாதிப்புக்குள்ளாகிய மக்கள் யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாத நிலையில் உள்ளனர். இப்படியானதொரு இக்கட்டான சூழ்நிலையில் இவ்வாண்டு நாம் கிறிஸ்மஸ் விழாவை எதிர்கொள்கின்றோம். இந்த அவலம் நிறைந்த வாழ்வியல் சூழலில் இந்தக் கிறிஸ்மஸ் விழா எப்படியான நம்பிக்கையை, ஆறுதலை நமக்குத் தருகின்றது எனச் சிந்திப்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**மனித நிலைக்கு இறங்கிய இறைவன்**

மனித வரலாற்றில் கடவுளின் உள்நுழைவே கிறிஸ்மஸ் விழாவாகும். அதாவது உலகத்தை மீட்பதற்காக இறைத் தந்தையின் மகனாக, மனிதனாக, குழந்தையாக இயேசு இந்த உலகத்தில் வந்து பிறந்தார்.

விண்ணகக் கடவுள் மண்ணக மனிதனாக வந்து பிறந்த இந்த விழா மகிழ்வின் விழா! அந்த மகிழ்ச்சிதான் அனைத்து வகையான கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் அடிப்படையாகும்.

விண்ணகக் கடவுள் மண்ணக மனிதனோடு தன்னை இணைத்துக் கொண்டார், பிணைத்துக் கொண்டார். மனிதனாகப் பிறந்த அவர் அதிலும் ஏழைக் குழந்தையாகவே பிறந்தார்! அவரைப் பெற்றெடுப்பதற்கு ஒரு இடம் கிடைக்காத நிலையில் மாடுகள் அடையும் ஒரு மாட்டுக்கொட்டிலே அவருடைய பிறப்பின் இடமானது. 'மனுமகனுக்குத் தலைசாய்க்கக்கூட இடமில்லை' என்பதே அவருடைய வாழ்வானது. இறந்தபின்னர்கூட அவரை அடக்கம் செய்வதற்கு இரவல் கல்லைறைதான் கிடைத்தது. இப்படியாக இயேசு ஓர் ஏழையாகவே பிறந்தார், ஓர் ஏழையாகவே வாழ்ந்தார், ஓர் ஏழையாகவே இறந்தார்.

கடவுள் மனிதனாகிய இந்த மாபெரும் செய்தியை திருவிவிலியம் இவ்வாறு குறிப்பிடுகின்றது. 'கடவுள் தன்மையில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்கவேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் தன்மைபூண்டு மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, தம்மைத் தாழ்த்திச் சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்படிபவரானார்' பிலிப்பியர் 2: 6 - 8). இதையே இயேசுவின் 'மனிதாவதாரம்' அல்லது 'மனுவுடல் ஏற்பு' என்று திருச்சபை கற்பிக்கின்றது.

**மனிதரோடு கலந்த கடவுள்**

கடவுள் கடந்தவரா? கலந்தவரா? என்ற கேள்வியை எழுப்பி நாம் சிந்திக்கலாம். அதாவது மனிதரைக் கடந்து வாழும் கடவுளா? அல்லது மனிதரோடு கலந்து வாழும் கடவுளா? என்பதே கேள்வி! தத்துவவியலாளர்களின் கருத்துப்படி கடவுள் இரண்டு தன்மைகளைக் கொண்டிருக்கிறார். ஒன்று கடந்தவர், இரண்டு கலந்தவர். கடவுள் கடந்தவர்; என்பது பழைய சித்தாந்தம். கடவுள் உண்மையாகவே மக்கள் நலனில் அக்கறையுடையவராக இருந்தால் அவர் மக்கள் வாழ்வில் கலந்தவராகவும் இருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் இறைவன் மக்களைக் கடந்தவராக இருந்தார். அதேவேளை கடந்து நின்று மக்களின் தேவைகளில் துன்ப நேரங்களில் ஈடுபட்டவராகவும் இருந்தார்.

அடையாளங்கள், அருங்குறிகள் இறைத்தூதர்கள், இறைவாக்கினர்கள் வழியாகாச் செயற்பட்டார். தற்கால இறையியலின்படி கடவுள் கடந்து இருப்பவர் மட்டுமல்ல, கலந்தும் இருப்பவர் ஆவார். மக்கள் துன்பப்படும் போது, தேவையில் துடிக்கின்றபோது, அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவிக்கும்போது கடவுள் நம்மோடு கலந்திருக்கிறார்.

(10ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடரில் உருவான மனிதநேயம் நாட்டில் நிரந்தரமாக நிலவட்டும்!

## கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் யாழ்.மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

பேரிடரில் ஏற்பட்ட மனித நேயம் இலங்கையில் நிரந்தரமாகக் குடிகொள்ளவேண்டும். நீண்டகால இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தர தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உழைக்க வேண்டும் இவ்வாறு யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கிறிஸ்மஸ் பெருவிழாவை முன்னிட்டு அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடிகொண்ட மாபெரும் மறைநிகழ்வை கொண்டாடும் இந்த நாளில் பாலக இயேசுவின் அருளும் ஆசீரும் என்றும் உங்களுடன் இருக்க ஆசிக்கின்றேன். கிறிஸ்து பிறப்பு விழா, கடவுள் தன்னை எமக்கு கொடையாகத்தந்த மாபெரும் பகிர்வின் விழா. காரிருள் சூழ்ந்த மனுக்குலத்தை, ஒளியின் பாதையில் வழிநடத்திச்செல்ல ஏழ்மையின் கோலம்பூண்ட இறைவன், தன்னைதாழ்த்திப் பேரிடர் மத்தியில் மனுவுரு எடுத்த விழா.

இந்த விழாவைக் கொண்டாடும் எமக்கு, இலங்கை தேசத்தில் அண்மையில் நடைபெற்ற இயற்கை அனர்த்தம் பெரும் துன்பியல் அனுபவத்தை தந்தாலும், மனுவுருவேற்பின் மறைபொருளையும், பகிர்தலால் பிறக்கும் பெரும் மகிழ்வையும் அதிகமாக உணர்ந்துகொள்ளும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்துள்ளது. பேரிடர், அதனால் ஏற்படும் துன்பங்கள், வலிகள், இழப்புகள், இடப்பெயர்வுகள் போன்றவை, தமிழ் மக்களுக்குப் புதியவையல்ல. கடந்த காலங்களில் இவைகள் எல்லாவற்றையும் தமிழ் மக்கள் தமது வாழ்வியலுக்குள் கரைத்துக்கொண்டவர்கள். அதனால்தான் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வலிகளை உடனடியாக உணர்ந்துகொண்டு தன்னார்வத் தொண்டர்களாக உதவிக்கரம் நீட்டி விரைந்து செயற்பட்டார்கள். பேரிடர் காலத்தில் மக்கள் ஒருவரை ஒருவர் தாங்கிக்கொண்டு தங்களிடம் உள்ளதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டவிதம் மனித நேயத்தின் உயர் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

இலங்கை நாடு, சிங்கள பௌத்த பேரினவாதம், உள்நாட்டு யுத்தம், பொருளாதார சிக்கல், ஆட்சி மாற்றம், இயற்கைப் பேரிடர், பூகோள அரசியல் மாற்றத்தால் ஏற்படும் சர்வதேசத் தலையீடு, போன்றவற்றை ஊடறுத்து நகர்ந்துகொண்டிருக்கும் சூழலில் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்வதிலுள்ள காலதாமதம் தமிழ் மக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தருகின்றது.

பேரிடரில் வெளிப்பட்ட மனிதநேயம் இலங்கையில் நிரந்தரமாகக் குடியிருக்க தற்போதைய அரசு விரைந்து செயற்பட்டு இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். வன்முறை தவிர்த்து, சரியான புரிதலோடு, அகிம்சை வழியில் பாலக இயேசு கொணர்ந்த நிரந்தர அமைதியை ஏற்படுத்த அனைவரும் ஒன்றிணைவோம் என்றுள்ளது. (ம)

(தொடர்ச்சி)

# உன்னத இறைவனின்...

மனிதனைத் தன் சாயலாகவும் பாவனையாகவும் படைத்த இறைவன் அவன் துன்பப்படும்போது எவ்வாறு வெறுமனே வாழாதிருக்க முடியும்? அவர் கல்லல்ல! மக்களோடு கலந்தவர். அவர்தான் புதிய ஏற்பாட்டு இறைமகன் இயேசு. இவர்தான் 'இம்மானுவேல்' என்று திருவிவிலியத்தில் அழைக்கப்படுகின்றவர். இம்மானுவேல் என்ற வார்த்தைக்குப் பொருள் 'கடவுள் நம்மோடு' என்பதாகும். எனவேதான் லூக்கா 7:16 பகுதியில் 'கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார்' என்றும், யோவான் 1:14 பகுதியில் 'வாக்கு மனிதரானார், நம்மிடையே குடிகொண்டார்' என்றும் கூறுகின்றது.

கடவுள் எப்போதெல்லாம் நம்மில் கலந்து, நம்மோடு வாழ்கின்றாரோ அப்போதெல்லாம் நமக்கு மகிழ்ச்சியான வாழ்வு பிறக்கின்றது. எம் கடவுள் உலகம் வாழ்வதற்காக மனிதனாகப் பிறந்த கடவுள். இந்தக் கடவுள் இயேசுவின் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றார். பாவிகளோடும், ஏழை, எளிய மக்களோடும் வாழ்ந்தவர். இன்றும் வாழ்ந்துகொண்டிருப்பவர்.

### 'அஞ்சாதே, நான் உன்னோடு'

பெருவெள்ள அனர்த்தத்தால் உறவுகளை இழந்த மக்களுக்கு, உடைமைகளை இழந்த மக்களுக்கு, உள்ளம் உடைந்த மக்களுக்கு இறைவன் தனது பிரசன்னத்தை, உடனிருப்பை இந்தக் கிறிஸ்மஸ் காலத்தில் மீண்டும் உறுதிப்படுத்துகின்றார். 'அஞ்சாதே, நான் உன்னோடு இருக்கிறேன்' என்பது பைபிளில் உள்ள ஏசாயா நூலில் 41:10 வசனத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு பிரபலமான ஆறுதல் வார்த்தையாகும். 'அஞ்சாதே நான் உன்னுடன் இருக்கிறேன். கலங்காதே, நான் உன் கடவுள். நான் உனக்கு வலிமை அளிப்பேன். உதவி செய்வேன்;: என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன். உனக்குத் துணையாய் இருப்பேன்' (எசாயா 41:10,13) என்பது இப்பகுதியின் முழுமையான வார்த்தையாகும்.

இன்று பாதிப்புற்ற மக்கள் விரக்தியில் வாழ்கின்றனர். மனச்சோர்வு, எதிர்காலம் பற்றிய அங்கலாய்ப்பு, பயம் போன்ற சூழ்நிலைகளில் வாழ்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் இந்த வார்த்தைகள் மக்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் தரும் வார்த்தைகள் ஆகும்.

### அமைதி அருளும் ஆண்டவர்!

இன்று நாம் அலைபேசி ஊடாக கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்திகளை குறுஞ்செய்தி களாக அனுப்புகின்றோம். அலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் வருவதற்கு முன்னர் கிறிஸ்மஸ் வாழ்த்துமடல்களை அனுப்பினோம். இந்த உலகத்தில் ஒலித்த முதல் கிறிஸ்மஸ் வாழ்த்து எது தெரியுமா? அதுதான், 'உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக! (லூக்கா 2:14) என்று விண்ணகத் தூதர் பேரணி பாடிய மகிழ்ச்சிக் கீதம் ஆகும். பைபிளின் முன்னைய தமிழ் மொழிபெயர்ப்பில் 'சமாதானம்' என்று வழங்கப்பட்ட வார்த்தையே தற்போதைய மொழிபெயர்ப்பில் 'அமைதி' என்ற வார்த்தையால் அழைக்கப்படுகின்றது.

வெள்ள அனர்த்தம் ஏற்படுத்திய பல்வேறு தாக்கங்களால் பல மக்கள் தமது மன அமைதியை, சமாதானத்தை இழந்துவிட்டனர். இந்த நிலையில் கடவுள் தமது அன்பு மகன் இயேசுவின் பிறப்பின் வழியாக அமைதியை, சமாதானத்தை வாக்களிக்கின்றார்.

'அமைதியை அருளும் ஆண்டவர்தாமே எப்பொழுதும் எல்லா வகையிலும் உங்களுக்கு அமைதி அளிப்பாராக' (2 தெசலோனிக்கர் 3: 16) என்ற திருத்தூதர் பவுலின் வார்த்தைகள் இந்தச் சந்தர்ப்பத்தில் நமக்கு ஆறுதலின் வார்த்தைகளாக அமைகின்றன. தொடர்ந்து அவர், 'அமைதியை அருளும் கடவுள் உங்களோடு இருப்பார்' (பிலிப்பியர் 4: 6 9) என்ற வாக்குறுதியையும் கூறுகின்றார்.

வானதூதர் அவர்களிடம், 'அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்' (லூக்கா 2:10 - 11) என்னும் இந்த வார்த்தைகள் இன்றைய துன்பச் சூழலில் வாழும் மக்களை ஆறுதல்படுத்தும், ஆற்றுப்படுத்தும் வார்த்தைகள் ஆகும்.

இயேசுவின் பிறப்பின் ஊடாக ஆண்டவனின் அன்பு இந்தப் பூமியில் வெளிப்பட்டது. 'கடவுளின் இரக்கப் பெருக்கத்தால் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகின்றது' (லூக்கா 1:78) என்ற வார்த்தைகள் இயேசுவைக் குறித்துச் சொல்லப்படுகின்ற வார்த்தையாகும்.

எனவே இந்தக் கிறிஸ்மஸ் பெருவிழா அதாவது இயேசுவின் பிறப்பு விழா என்பது ஒரு ஆறுதலின் விழா, தேற்றரவின் விழா, நம்பிக்கையின் விழா. காரணம் மனித நிலைக்கு இறங்கிவந்த இறைவன் மனிதரோடு கலந்தார். அவர் 'அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன்' என்று ஆறுதல்படுத்துகின்றார், ஆற்றுப்படுத்துகின்றார். அவரே அமைதியையும் சமாதானத்தையும் இன்று நமக்குத் தருகின்றார்.




அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண மண்டபம்
(ASR WEDDING HALL)
முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்
எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் இனிய கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.
அப்புக்குட்டி அண்ணை என்ன? வேகமாக நடந்து போறீர்?
ஏட தம்பி சுப்பற்றை மகளுக்கு அண்ணாமலையான் கல்யாண மண்டபத்திலே கல்யாணம்.
எட தம்பி சாப்பாடு எப்படி?
அட தம்பி சுப்பர் எட சுப்பர்.
பிள்ளைகளின் திருமண வைபவம், பூப்புனித நீராட்டு விழா, கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், தென்னிந்திய திரைப்படங்களை படமாக்க உகந்த மண்டபம். நிகழ்ச்சிகளை செய்ய விரும்புபவர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 09 மணி முதல் மாலை 04.30 மணிவரை மண்டபத்தை பார்வையிடலாம். ஞாயிறு விடுமுறை
கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி எண்: 076 744 6064, 021 222 1355
(CS 80146) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிலத்துக்காக ஒருங்கிணைவோம்' சுயாதீன செயலணி கிழக்கில் உதயம்

**திருகோணமலை, டிசெ.25**
**'நிலத்துக்காக ஒருங்கிணைவோம்' எனும் தொனிப்பொருளுடன் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நில அபகரிப்புகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகள் இணைந்து சுயாதீன செயலணி ஒன்றை உருவாக்கியுள்ளனர். அம்பாறை, மட்டக்களப்பு,திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த 15 பிரதிநிதிகள் இணைக்கப்பட்டு இந்தச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.**




அகம் மனிதாபிமான வள நிலையம் மற்றும் சூழலியல் நீதிக்கான மக்கள் கூட்டு ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்தச் செயலணியை அமைப்பதற்கான வழிகாட்டல்களை வழங்கியிருந்தன.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிலவிவரும் நில அபகரிப்பு சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் இந்தச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இடம்பெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் குச்சவெளி பிரதேசசபை அங்கத்தவர் டனுசன் தெரிவிக்கையில்,

"திருகோணமலை மாவட்டத்தில் நிலவிவரும் நில அபகரிப்பு,சிங்கள பௌத்த மயமாக்கல் போன்ற பிரச்சினைகள் இன்னும் பேசுபொருளாகவே இருந்து வருகிறதே தவிர, இதுவரை நிரந்தரமான தீர்வுகள் எவையும் கிடைக்கவில்லை. குறிப்பாக குச்சவெளிப் பிரதேச செயலகப் பிரிவிற்குள், தமிழ் பேசும் தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்களின் பூர் வீக நிலங்கள் பல்வேறு காரணங்களின் பெயரில் அபகரிக்கப்படுகின்றன. இவற்றுக்கு உதாரணங்களாக தென்னமரவாடி தொல்லியல், புல்மோட்டை தொல்லியல் மற்றும் புனித பூஜா பூமி, திரியாய் தொல்லியல் மற்றும் பூஜா பூமி, வனவளத்துறை ஆகியவற்றின் பெயரால் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளைக் கூறலாம்.

ஈழப் போருக்குப் பின்னர் நாட்டில் ஐந்து ஜனாதிபதிகள் மாறிய போதும், தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தரமான தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை - என்றார். (ச-50)

# இலங்கை உட்பட 30 நாடுகளின் தூதுவர்களை மாற்றும் ட்ரம்ப்

கொழும்பு, டிசெ.25
இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த சுமார் 30 அமெரிக்கத் தூதர்கள் மற்றும் மூத்த இராஜதந்திர அதிகாரிகளைத் திரும்ப அழைக்க டிரம்ப் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் கொள்கைகளை முழுமையாக ஆதரிப்பவர்களுடன் அமெரிக்க இராஜதந்திரக் கொள்கைகளை செயற்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை உட்பட 29 நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதுவர்கள் மற்றும் மூத்த இராஜதந்திர அதிகாரிகளின் பதவிக்காலம் ஜனவரியில் முடிவடையும் என்று அமெரிக்க அரசாங்கம் கடந்த வாரம் அதிகாரபூர்வமாக அறிவித்தது என்றும் கூறப்படுகிறது.

இந்த அனைத்து இராஜதந்திர அதிகாரிகளும் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அவர்கள் இதுவரை அந்த பதவிகளில் பணியாற்ற வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 13 ஆபிரிக்க நாடுகள், ஆறு ஆசிய நாடுகள், நான்கு ஐரோப்பிய நாடுகள், இரண்டு மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் இரண்டு தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளைச் சேர்ந்த அமெரிக்க தூதர்கள் மற்றும் இராஜதந்திரிகளையே டிரம்ப் நிர்வாகம் திரும்ப அழைத்துள்ளது. (எ-இ)

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். பிராந்தியக் கிளைகளின் அனுசரணையில் சஞ்சீவி" மாதர் பாரம்பரிய உள்ளூர் உற்பத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் வர்த்தக கண்காட்சி சாவகச்சேரிக் கிளை முன்றலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ச-இ)






# வாசிப்பு மாத நிகழ்வும் பரிசில் வழங்கலும்!

சாவகச்சேரி, டிசெ.25
சாவகச்சேரிப் பிரதேசசபையின் சரசாலை பொதுநூலகம் நடத்திய தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வும், பரிசில் வழங்கலும் மட்டுவில் கமலாசனி வித்தியாலய சுப்பையா அரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் பொன்னையா குகதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன், சிறப்பு விருந்தினராக மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி பிரதி அதிபர் கஜேந்தினி மஹிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது மாணவர்களின் கலைநிகழ்வுகளும், வாசகர்களுக்கு இலவச அங்கத்துவம் வழங்கலும், வாசகர்களுக்கான பரிசில் வழங்கலும், சரசாலையூர் கவிஞர் கலைதாசன், ஓய்வுநிலை நூலகர் கணேஸ் ஆகியோரின் கௌரவிப்பும் இடம்பெற்றன. (ச-41-9)

# இளந்தளிர் முன்பள்ளி கலைநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.25
வடமராட்சி உடுப்பிட்டி தெற்கு இளந்தளிர் முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழாவும் கௌரவிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டிக் கலாசார மண்டபத்தில் உடுப்பிட்டி நலன்புரிச் சங்கத் தலைவர் சிதம்பரப்பிள்ளை சிவரஞ்சன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் குமாரசாமி சுரேந்திரன் பிரதம விருந்தினராகவும், சபையின் செயலாளர் கணேசன் கம்சனாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். (ச-66)



# கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்!

யாழ்ப்பாணம் டிசெ.25
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2026ஆம் ஆண்டின் முதலாம் அரையாண்டுக்கான முழு நேரக் கற்கைநெறிகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

தகவல் தொழினுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், அறை பராமரிப்புச் சேவையாளர், நீர்க்குழாய்ப் பொருத்துநர், மோட்டார்சைக்கிள் பொறிவலர், அலுமினியம் பொருத்துநர், உணவு மற்றும் குளிர்பாணம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடைவடிவமைப்பாளர், விரைவுசேவை உணவு வழங்குநர், முதியோர் பராமரிப்பாளர், டீசல் பெற்றோல் வாகன பொறிவலர், கட்டட நிர்மாண உதவியாளர், கணினி வன்பொருள் திருத்துநர் போன்ற கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த கற்கைநெறிகளுக்குரிய பதிவுகளை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்திலும் அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ளமுடியும். (ச-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக் குளத்திலிருந்து கிளிநொச்சிக்கு குடிதண்ணீர்



### 3 இடங்கள் அடையாளம்

கிளிநொச்சி,டிசெ.25

**இரணைமடுக்குளத்திலிருந்து, கிளிநொச்சிக்கு குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்காக 3 இடங்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன.**

இதற்கான ஒப்புதல் கடிதம் கமக்கார அமைப்புகளின் சம்மேளனப் பிரதிநிதிகளால், மாவட்டச் செயலரிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, கிளிநொச்சிக் குளத்திலிருந்து நீரைச் சுத்திகரித்து மக்களுக்கு விநியோகிக்கின்றது. கிளிநொச்சிக் குளத்தின் நீரின் தரம் மழைக் காலங்களில் குறைவாகக் காணப்படுகின்றநிலையில், இரணைமடுக் குளத்திலிருந்து நீரைப் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் இரணைமடு கமக்காரர் அமைப்புகளின் சம்மேளனத்தினர், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் மற்றும் பொறியியலாளர் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரணைமடுக்குளத்தில் மூன்று இடங்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. கிளிநொச்சிக் குளம் வான் பாயும் பகுதி, கோவிந்தன் கடைச்சந்தி, திருவையாறு ஏற்று நீர்ப்பாசனம் இயங்கிவரும் பகுதி என்பவற்றை அடையாளங்காட்டி, அதற்கான ஒப்புதல் கடிதம் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (சு-113)

## புதிய அரசியல் கலாசாரத்தில் முன்மாதிரியாக அரசாங்கம்

### அமைச்சர் சந்திரசேகர் பெருமை

கொழும்பு,டிசெ.25

நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தி, எமது அரசாங்கம் முன்மாதிரியாகச் செயற்படுகின்றது. இதற்காக எமக்கான பல சலுகைகளையும் தியாகம் செய்துள்ளோம் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

க.பொ.த உயர் தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வடமாகாண மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு, கிளிநொச்சியிலுள்ள நெலும்பியச மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அவர் மேலும் தெரிவிக்கையில்,

வங்குரோத்து நிலையில் இருந்த நாடே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் பொருளாதார ரீதியாக பாதிப்புகள் இருந்தன. எனவே, பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு கடந்த ஒரு வருடமாக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

புதிய அரசியல் கலாசாரம் என்றால் என்னவென்பதை நாம் செயலில் காட்டியுள்ளோம் கடந்த காலங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடின. இவற்றை ஒழிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து எமது இளைஞர் சமுதாயத்தை நாம் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்-என்றார்.' (சு-26)



## ஒளிவிழா

மாந்தை மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் ஏற்பாடுசெய்த ஒளிவிழா நிகழ்வு மன்னார் பட்டித்தோட்டத்தில் அமைந்துள்ள வயோதிபர் இல்லத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

மாந்தை மேற்கு சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ஒஸ்மன் டெனி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ கலந்துகொண்டார். ஓய்வுநிலை ஆயர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டுத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன. வயோதிபர்களுக்கு ஓய்வுநிலை ஆயர் மற்றும் எமுத்தூர் பங்குத்தந்தை லோரன்ஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து அன்பளிப்புப் பொருள்களை வழங்கிவைத்தனர்.

பல்வேறு சுமைகளையும், துன்பங்களையும் மனதில் சுமந்த நிலையில் குறித்த வயோதிபர் இல்லத்தில் வசித்துவருகின்ற வயோதிபர்களை மகிழ்விக்கும் வகையில் ஒளிவிழா நிகழ்வை முன்னெடுத்தமை சிறப்புக்குரிய விடயமாகும். (ச-41-56)




## சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.25

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வுகள், நகராட்சிமன்ற பொன்விழா மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றன. கலைநிகழ்வுகளுடன், உள்ளூராட்சி வாரப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி மாணவர்கள், சபை உத்தியோகத்தர்கள் மற்றும் அண்மையில் ஓய்வுபெற்ற சபை உத்தியோகத்தர்கள் நினைவுச்சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் முன்பள்ளி ஆசிரியர்கள், சிரேஷ்ட பிரஜைகள், கர்ப்பிணிகள்,பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன. தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சா.சுதர்சன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி நிருபராஜ் லாகினி, நகரசபை உறுப்பினர்கள், வாசகர்கள், பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (சு-159)

## பவளவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.25

மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் கோகிலா மகேந்திரனின் பவள விழா நிகழ்வு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு நடைபெற்றது.

பவளவிழா நூலை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா வெளியிட்டுவைக்கப் பேராசிரியர் க.சிவபாலன் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். பேராசிரியர். மனோன்மணி சண்முகதாஸ் நூல் அறிமுகவுரையை ஆற்றினார். இதன்போது கோகிலா மகேந்திரனின் மாணவர்களின் போலச் செய்தல் நடிப்பு அளிக்கை, வான்விளிம்பில் ஒரு நட்சத்திரம் எனும் நாடகம் என்பன இடம்பெற்றன. தொடர்ந்து உன்னத ஆளுமையாளராக கோகிலா மகேந்திரன் பெரிதும் வெளிப்படுவது கல்வியியலாளராகவே, எழுத்தாளராகவே, உளவியலாளராகவே, நாடக வல்லுநராகவே எனும் தலைப்பில் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா தலைமையில் பட்டிமன்றமும் இடம்பெற்றது. (ச-41-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஒற்றை ஆட்சி திணிக்கப்படின் தமிழீழ விடுதலைப் போருக்கே வழிவகுக்கும்!

## கூட்டாட்சி முறையை உறுதிசெய்யுமாறு பா.ம.க. தலைவர் அன்புமணி வலியுறுத்து

**கொழும்பு,டிசெ.25**

**இலங்கையில் சிங்களப் பேரினவாதத்தை மேலும் ஊக்குவிக்கும்வகையில் ஒற்றையாட்சி முறையை ஏற்படுத்தும் நோக்குடன் அரசியல் சட்டத்தைத் திருத்த அந்த நாட்டு அரசு முடிவு செய்யின் ஈழத்தமிழரின் மனதிலும் உறங்கிக் கொண்டிருக்கும் ஈழ விடுதலைப் போர் உணர்வுகளைத் தூண்டி விட்டு விடும். அது இலங்கையின் எதிர்காலத்துக்கு எல்லா வழிகளிலும் பாதகமானதாகவே அமையும்.**

இவ்வாறு சென்னை சென்றுள்ள தமிழ்த் தேசியப் பேரவையுடனான சந்திப்பில் பா.ம.க. தலைவர் அன்புமணி இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு தேசிய இனங்கள் வாழும் நாட்டில் இனவாதத்தை ஊக்குவிக்கும் வகையிலான முயற்சிகள் மிகவும் ஆபத்தானவை; அவை கண்டிக்கத் தக்கவை. இலங்கையில் தமிழர்களுக்கு அதிகாரமே கிடைக்க வாய்ப்பில்லாதவகையில், அரசியல் சட்டத்தை திருத்த சிங்கள ஆட்சியாளர்கள் சதித்திட்டம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண அரசுகளும்கூட 2018 ஆம் ஆண்டுடன் காலாவதியாகி விட்டன. அதன்பின் கடந்த 8 ஆண்டுகளாக இல்லாத காரணங்களைக் கூறி மாகாணத் தேர்தல்களை நடத்த சிங்கள அரசு மறுத்து வருகிறது.

இலங்கை இனச்சிக்கலுக்குக் காரணமே அங்குள்ள தேசிய இனமான தமிழர்களுக்கு எந்த அதிகாரமும் அளிக்கப்படாமல் அடக்கி ஆளப்பட்டது தான். உலக நாடுகளின் துணையுடன் நயவஞ்சகமாக விடுதலைப்புலிகள் இயக்கத்தை வீழ்த்திவிட்டதாக நினைத்துக் கொண்டு தான் சிங்கள ஆட்சியாளர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் இயக்கம் இல்லாவிட்டாலும், தமிழீழ விடுதலைப் போருக்கான காரணங்கள் நீடித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இப்போது இலங்கைத் தமிழர்களுக்கு எந்தவகையிலும், எந்தக் காலத்திலும் அதிகாரம் அளிக்க முடியாத அளவுக்கு இலங்கையின் அரசியலமைப்புச் சட்டம் மாற்றியமைக்கப்பட்டால், அது ஒவ்வொரு ஈழத்தமிழரின் மனதிலும் உறங்கிக் கொண்டிருக்கும் ஈழ விடுதலைப் போர் உணர்வுகளைத் தூண்டி விட்டு விடும். அது இலங்கையின் எதிர்காலத்துக்கு எல்லா வழிகளிலும் பாதகமானதாகவே அமையும்.

எனவே, இலங்கையில் ஒற்றை ஆட்சி முறையை ஏற்படுத்தும் முடிவைக் கைவிட்டு, தமிழர்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கும் கூட்டாட்சி முறையை ஏற்படுத்தும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை செய்யவேண்டும் - என்றார். (ச-இ)



# புனரமைத்த ஓராண்டுக்குள் சிதைவடைந்தது வீதி!

## *தரமற்ற புனரமைப்பென மக்கள் குற்றச்சாட்டு*

கிளிநொச்சி,டிசெ.25

கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலய வளாக வீதி புனரமைக்கப்பட்டு குறுகிய காலத்துக்குள்ளேயே மிகக் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ், கடந்த வருடம் ஏப்ரல் மாத காலப்பகுதியில் புனரமைக்கப்பட்ட இந்த வீதி குறுகிய காலத்துக்குள் சேதமடைந்துள்ளது.

ஒப்பந்தகாரர்களின் தரமற்ற புனரமைப்புப் பணிகளே இதற்குக் காரணமாகும்.

இது குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பாடசாலையின் பெற்றோர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-214)



சண்டிலிப்பாய்

# அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிரதேசசபையினர் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆளுங்கட்சியின் அனைவரும் அனுமதிக்கப்பட்ட நிலையில் தமக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது உள்ளது என்று பிரதேச சபையின் உறுப்பினர்கள் முரண்பாட்டில் ஈடுபட்டனர்.

சண்டிலிப்பாய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்றுமுன்தினம் சண்டிலிப்பாய் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் ஸ்ரீ பவானந்தராஜா தலைமையில் ஆரம்பமானது.

இதன்போதே குறித்த கூட்டத்துக்கு தமக்கான அழைப்பு விடுக்கப்படவில்லை என உறுப்பினர்கள் பிரதேச செயலகத்துக்கு வெளியே முரண்பாட்டில் ஈடுபட்டனர். நாமும் மக்கள் பிரதிநிதிகளே. சமூகமட்ட அமைப்புகளுக்கு வழங்குகின்ற அனுமதி எமக்கும் வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஆளும் கட்சியின் ஆறு உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்ட நிலையில் தமக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதனால் அங்கு குழப்பநிலை ஏற்பட்டது. அதனையடுத்து அவர்களின் ஐந்து உறுப்பினர்கள் மாத்திரம் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்ட நிலையில் கூட்டம் இடம்பெற்றது. (ச-27)

# மன்னாரில் களைகட்டும் பண்டிகை வியாபாரம்

மன்னார்,டிசெ.25

நத்தார் , புதுவருடப் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மன்னார் நகர சபைப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பண்டிகைக் கால வியாபாரம் களைகட்டியுள்ளது.

நகரசபையின் கேள்வி கோரல் அடிப்படையில் சுமார் 350 க்கும் மேற்பட்ட வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ள வியாபார நடவடிக்கைகள், எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இடம்பெறும். இங்கு உள்ளூர் மற்றும் தென்பகுதி வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் நகர்ப் பகுதிக்கு வருகைதந்து பொருள்களைக் கொள்வனவு செய்துவருகின்றனர். கடந்த காலங்களைவிட இம்முறை அதிகமாக, விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், மக்களும் ஆர்வத்துடன் பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர். (க-56)





வரணி குடும்ப முன்பள்ளிகளின் மாணவர் கௌரவிப்பும் கலை நிகழ்வும் தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் வரணிப் பிரதேச முன்பள்ளிகளில் கல்வி கற்று 2026 ஆம் ஆண்டு பாடசாலைக் கல்வியைத் தொடரும் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-159)

# கனடாவில் விபத்து; இலங்கையர் பலி


றொறண்டோ,டிசெ.25

கனடாவில் இடம்பெற்ற கோர விபத்தில் இலங்கையைச் சேர்ந்த தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் றொரன்ரோவை வாழ்விடமாகவும் கொண்ட 65 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி , பின்னர் அவை வீதியால் சென்று கொண்டிருந்தவர்களையும் மோதித் தள்ளியதிலேயே குறித்த நபர் உயிரிழந்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்கந்தபுரத்தில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, டிசெ.25

கிளீன் சிறிலங்கா நிகழ்ச்சி திட்டத்தின் கீழ், கரைச்சி பிரதேச செயலர் பிரிவின், நடமாடும் சேவை ஸ்கந்தபுரம் இல. 1 அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நேற்று நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில் பல்வேறு திணைக்களங்களின் சேவைகள் மக்களுக்குஒரேநாளில்நிறைவேற்றப்பட்டன. பெருந்திரளான மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர். கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், வடக்கு வலயத்துக்குப் பொறுப்பான மேலதிக பதிவாளர் நாயகம் ,பிரதேச சபை உறுப்பினர்கள், கரைச்சி பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், நடமாடும் சேவையுடன் தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(க-113)

# டித்வா பேரிடரின் பின்னர் யாழ்ப்பாணத்தின் நிலமை

## அதிகாரிகள் கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் டித்வா பேரிடரின் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் முடிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில், திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தகுதியான மக்களுக்கு சமைத்த உணவு, உலர் உணவு மற்றும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை ஒரு வாரத்துக்குள் இடரால் பாதிக்கப்பட்ட உட்கட்டுமானங்களின் சேத விபரங்கள் உள்ளிட்ட முழுமையான விவரங்கள் ஜனாதிபதியால் கோரப்பட்டுள்ளன. எனவே திணைக்களங்களின் ஆளுகைக்குட்பட்ட வீதி, இறங்குதுறை, விவசாயம், கடற்றொழில் உள்ளடங்கிலான உட்கட்டுமான பாதிப்புக்கள் தொடர்பில் சரியான தகவல்களை அறிக்கையிட வேண்டும் என்று மாவட்டச் செயலர் திணைக்களத்தலைவர்களைக் கேட்டுக் கொண்டார்.

(க-27)


# வேலையாட்கள் தேவை

**வேலை இல்லாதவர்களுக்கு அரிய வேலை வாய்ப்பு**

யாழ் நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள ஆர்.வி.ஜி.பீடி கம்பனிக்கு வேலையாட்கள் தேவை

- உதவியாளர் (21 - 40 வயதிற்குட்பட்ட ஆண்கள்)
- காவலாளி (21 - 50 வயதிற்குட்பட்ட ஆண்கள்)

**தகமைகள் :** முன்பு வேலை செய்த அனுபவம், மற்றும் வேலை செய்த இடத்தின் சான்றுப்பத்திரம், கிராமசேவகரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ், கடவுச்சீட்டு போட்டோ, தேசிய அடையாள அட்டை போட்டோ பிரதி, சுயவிபரக் கோவை (Bio Data) என்பவற்றை நேரில் வரும்போது கொண்டு வரவும்.

கீழ் காணும் முகவரிக்கு நேரில் வரவும்

ஆர்.வி.ஜி பீடி கம்பனி
இல. 58 குறுக்கு வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் : 021 222 4766, 021 222 6806


# 29 ஆம் வருட நினைவில்...

## வி.எஸ்.குணசிங்கம்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் வன பரிபாலனத் திணைக்களம்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.02.1931 | 16.12.1996 |

அன்போடு அக்கறையும்,
வாஞ்சையுடன் வழிகாட்டலும்,
கண்டிப்புடன் ஒழுக்கத்தையும்
தந்து - எங்களை
முழுமையாக்கினீர்கள்
- என்றும்
நினைவுகளால் உங்களை
அர்ச்சிப்போம்.

3, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மநாதன் தனபாக்கியலட்சுமி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.03.1960 | 22.12.2025 |

நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் தனபாக்கியலட்சுமி அவர்கள் கடந்த 22.12.2025 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற வைத்தியாம்பிள்ளை ரெத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், பத்மநாதன் அவர்களின் பாசமிகு மனைவியும், ஐக்ஷனா(லண்டன்), கபிலன், கவிலக்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், றஜிந்தன் (கண்ணா-லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும் கதிரமலைப்பிள்ளை (ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர்-வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்), அமரர் கௌரியம்மா, கெங்கேஸ்வரி (ஓய்வு நிலை ஆசிரியர்-யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), புவனேஸ்வரி (லண்டன்), மங்கையற்கரசி (சுவிஸ்) மீனாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (25.12.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1010/18 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.
0773069568, 0775688842

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11.09.1973 | 23.12.2025 |

## இரத்தினராசா கிருஷ்ணமோகன்

**(Ratna Engineers and Constructors நிறுவன ஸ்தாபகரும் அதன் முகாமைத்துவப்பணிப்பாளரும்)**

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு, கேணியடி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இல.375/3, முத்துத்தம்பி லேன், நாவலர் வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினராசா கிருஷ்ணமோகன் அவர்கள் கடந்த (23.12.2025) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினராசா - செல்வாரணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - இராசமணி தம்பதியரின் மருமகனும், நிகிலா அவர்களின் அன்புக் கணவரும், திருஷாயினி (மருந்தகவியல்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இணைந்த சுகாதார விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவி) அவர்களின் ஆசை அப்பாவும், கிருஷ்ணானந்தன் (மாவட்ட சேவை உத்தியோகத்தர் தொழில்துறைத் திணைக்களம் மாவட்ட செயலகம் வவுனியா), கிருஷ்ணகுமார் (மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்), கிருஷ்ணராஜன் (பிரதித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் அலுவலகம், வடக்கு மாகாணம்), சதீஸ்கா (விரிவுரையாளர் - நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி), சிறிதரன் (Konica & Sriram Jewellary), ரவீந்திரகுமார் (லண்டன்), ஜெயசீலன் (சாணுகா Jewellary), சிறிசக்திவேல் (Meenackshi Jewellary & Dotline Colour Lab) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விமலரதி, நித்தியகலா, விஜயகுமாரி, உஷாநந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி...

அவர் வெளியிட்டுள்ள காணொலி ஒன்றி லேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் அந்தக் காணொலியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணி காங்கேசன்துறை தையிட்டியைச் சேர்ந்த பொதுமக்களுக்குச் சொந்தமான தாகும். போர் நடைபெற்ற காலத்தில் பொதுமக்களின் காணிகள் கைப்பற்றப்பட் டன. அதன்பின்னர் அங்கு சட்டவிரோத மாகவே திஸ்ஸ விகாரை நிர்மாணிக்கப் பட்டுள்ளது.
இந்த உண்மை போர் இடம்பெற்ற காலத் திலிருந்து இங்கு மிக நீண்டகாலமாக வாழும் நாக விகாரையின் விகாராதிபதி யான எனக்கு மட்டுமே தெரியும். நாட்டில் உள்ள மக்கள் இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற சிக்கல்களை ஏற்படுத்திக் கொள்ளத்தேவையில்லை. விடயங்களை ஆராய்ந்து நாம் செயற்பட வேண்டும்.
இந்தநிலையில் வடக்குப் பிராந்தியத்துக் கான பிரதான சங்கநாயக்க தேரருக்கான பதவியை, போலியாக அமைக்கப்பட் டுள்ள திஸ்ஸ விகாரையின் விகாராதிப திக்கு பெற்றுக்கொடுத்துள்ளனர். பௌத்த தர்மத்துக்கு மாறாக அவருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.
நான் 53 வருடங்களாக இங்குள்ள தமிழ் மக்களுடனேயே நயினாதீவிலேயே தங்கி யுள்ளேன். மிகவும் சமாதானமாகவும் அன்பாகவும் தமிழ்ச் சகோதரர்களுடன் நாங்கள் ஒன்றாக வாழ்கின்றோம். தற் போது தையிட்டி பகுதிக்குத் தேரர் ஒருவர் வந்து, தமிழ் மக்களின் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி, விகாரைக் கான புதிய கட்டடங்களை நிர்மாணித்து வருகின்றார். இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு. இலங்கைவாழ் அனைத்து மக்களும் எவ்வித சிக்கல்களையும் ஏற்ப டுத்திக் கொள்ளாது, சிந்தித்துச் செயற்பட வேண்டும்.
அரசாங்கம் இந்த விடயத்தில் தலையீடு செய்து நடவடிக்கை எடுப்பது சிறந்தது என்பது எனது கருத்தாகும். இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற வகையில் கருத் துக்களைப் பகிர வேண்டாம் என ஏனைய தேரர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.
அனைவரும் ஒன்றிணைந்து கலந்துரை யாடித் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண் டும். அல்லாவிடின், இந்த விடயம் பெரும் பூதாகரமாகும். அப்போது தமிழ் மக்களு டன் இணைந்து செயற்பட வேண்டிய தேவை எங்களுக்கு ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன் - என்று தெரிவித்துள் ளார். (அ-எ-இ)

## இன்பருட்டி...

யொதுங்கியுள்ளது. நீலநிறக் காற்சட்டை மற்றும் பட்டர் நிற பனியன் அணிந்த நிலையில் காணப்படும் இந்தச் சடலம் அடையாளம் காணப்படவில்லை.
சடலம் தொடர்பில் அந்தப்பகுதி மீனவர் கள் தகவல் தெரிவித்ததை அடுத்து, பருத் தித்துறைப் பொலிஸார் சம்பவ இடத்துக் குச் சென்று விசாரணைகளை முன்னெ டுத்தனர்.
இந்தச் சடலம் இந்தியா - இராமேஸ்வரம் மீனவருடையதாக இருக்கலாம் எனச் சந் தேகிக்கப்படுகின்றது.
(அ-எ-100-27-110-66)

## யாழ்...

இல்லாத கன்றுகள் உள்ளிட்ட 15 மாடுகள் நேற்றிரவு கைப்பற்றப்பட்டுள்ளன.
இன்று கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட் படும் நிலையில், அதிகளவு இறைச்சி விற்பனையாகும் என்பதால், மாடுகளை இறைச்சியாக்கும் நோக்கில் இந்த மாடு கள் இறைச்சிக்கடை உரிமையாளர்க ளால் கொண்டுவரப்பட்டுள்ளன.
கொல்களத்தின் மேற்பார்வையாளருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் யாழ்ப் பாணம் மாநகரசபையின் உறுப்பினர்க ளான சுகாதாரக் குழுத் தலைவர் சாருஜன் மற்றும் மராமத்துக்குழுத் தலைவர் மயூ ரன், பிரதி மேயர் இம்மானுவேல் தயா ளன், நிசாந்தன், சுவிகரன் ஆகியோர் நேற்று இரவு கொல்களத்துக்கு நேரில் சென்று ஆராய்ந்தனர். இதன்போதே 15 மாடுகளும் மீட்கப்பட்டுள்ளன.
சான்றுப்படுத்தப்பட்டு காதுப்பட்டிகள் உள்ள மாடுகளே இறைச்சியாக்கப்படும் நிலையில், காதுப்பட்டியற்ற மாடுகளும், கன்றுகளும் கொல்களத்துக்குக் கொண் டுவரப்பட்டுள்ளன. இந்த விடயத்தில் அதி காரிகளுக்குத் தொடர்பிருக்கலாம் என் றும், இவ்வாறு மாடுகள் கொண்டுவரப் பட்டு இறைச்சியாக்கப்படுவது நீண்ட காலாக நடைபெறுகின்றது என்றும் சந்தே கிக்கப்படுகின்றது. அதேநேரம் மாடுகளுக் கான காதுப்பட்டி பணம் கொடுத்துப் பெறப் பட்ட மாடுகள் இறைச்சியாக்கப்படுகின் றன என்றும் கூறப்படுகின்றது.
இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் சம்பவ இடத்துக்குச் சென்று நேரில் ஆராய்ந்த யாழ்ப்பாணம் மாநகரசபையின் உறுப்பினர்கள் தெரி வித்தனர். (அ-எ-26)

## 2,77,000...

மதிப்பிட்டுள்ளது. அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரால் விவசாயம், மீன்பிடி மற்றும் கிராமியப் பொருளாதாரத் துக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்கள் தொடர் பான ஆரம்பகட்டத் தகவல்கள் அடங்கிய அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்பான உணவு மற்றும் விவ சாய அமைப்பு வெளியிட்டுள்ளது.
2026 ஆம் ஆண்டின் பெரும்போகத்தை எதிர்பார்த்து பயிர்ச்செய்கையை மேற் கொண்ட மற்றும் பயிரிடுவதற்கு உத்தே சித்திருந்த விவசாயிகள் இந்தப் பேரிடரால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது.
முதற்கட்ட மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஒரு லட்சத்து 6 ஆயிரம் ஹெக்டேயர் நெற்ப யிர்ச்செய்கைக்கான விவசாய நிலங்கள் பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ சேதமடைந்துள்ளன. இது 2026 பெரும் போகத்தில் மொத்தமாக மேற்கொள்ளப்ப டும் நெற்பயிர்ச்செய்கையில் 20 சதவீத மாகும். சிறியளவு நெற்பயிர்ச்செய்கை விவசாயிகள் உள்ளடங்கலாக இந்தப் பேரிடரால் சுமார் 2 லட்சத்து 77 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## ஆழ்கடல்...

யினருக்கு புலனாய்வுத் தகவல் கிடைத் துள்ளது. அதையடுத்து அந்தப் படகு பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டவேளை, போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. பட கில் இருந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ள னர்.
மேலதிக விசாரணைகளுக்காக கப்பல் நேற்றுகாலை திக்ஹோவிட்ட மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டது. 11 பொதிகளில் இருந்தே ஐஸ் மற்றும் ஹெரோயின் என்பன மீட்கப்பட்டுள்ளன. 169 கிலோ ஐஸ் போதைப்பொருளும், 21 கிலோவுக்கு மேற்பட்ட ஹெரோயினும் பொதிகளுக்குள் இருந்துள்ளன என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
அதேவேளை, போதைப்பொருள் விற்ப னையில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் பிடி யில் இருந்து தப்ப முடியாது என்று மீன்பி டித் துறைமுகத்துக்கு சென்றிருந்த பாது காப்பு பிரதி அமைச்சர் தெரிவித்தார். போதைப்பொருளை ஒழிப்பதற்கு மக்க ளின் ஒத்துழைப்பு அவசியம். மக்களால் வழங்கப்படும் தகவலின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-எ-44)

## 2026...

தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.
2025 கல்வியாண்டு நிறைவடைந்துள் ளதை அடுத்து, தமிழ் மற்றும் சிங்களப் பாடசாலைகளுக்கு நேற்றுமுன்தினம் முதல் எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி வரையும், முஸ்லிம் பாடசாலைகளுக்கு நாளைமறுதினம் முதல் எதிர்வரும் ஜன வரி 4 ஆம் திகதி வரையும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.
2026 கல்வியாண்டின் முதலாம் தவணை எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்ப மாகும். 2026 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணை கள் புதிய சுற்று நிருபத்துக்கமைவாக நடைமுறைப்படுத்தப்படும். பரீட்சைத் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்பட் டுள்ள பாடசாலைகளில் பரீட்சை நடத்தப் படும் தினங்களில் எவ்வித மாற்றங்களும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-க-159)

## கட்டுப்பாட்டை...

துள்ளது. மானிப்பாய் பொலிஸார் கார் ஒன்றைத் துரத்தி வந்தனர். அந்தக் கார் மூத்தநயினார் கோவிலுக்கு அருகாமை யில் உள்ள தையல் கடையையும் மற் றொரு கடையையும் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது. தையல் கடையில் உரையாடிக்கொண்டிருந்த மூவர் படுகாய மடைந்ததுள்ளனர்.
காயமடைந்த மூவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பிக் கப்பட்டனர். காரைச் செலுத்தி வந்த சாரதி மானிப்பாய் பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார். விபத்தில் இரண்டு கடை களும், மூன்று தையல் இயந்திரங்களும் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப் படுகின்றது.
விபத்தை அடுத்து அந்த இடத்தில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட் டிருந்தது. (அ-எ-26-27)

## மண்கும்பானில்...

தில் நேற்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பிரதேச செயலகம் எழுத்து மூலம் கனியவளத் திணைக்களத்துக்குக் கோரிக்கை விடுத்தும், அந்தத் திணைக்க ளம் நடவடிக்கை எடுப்பதில் அக்கறையற் றிருக்கின்றது என்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அங்கு கருத்துத் தெரிவித்துள்ள கனியவ ளத் திணைக்களத்தின் அதிகாரி, எம்மால் ஒரு நபரையோ, குழுவையோ சட்ட நட வடிக்கைக்கு உட்படுத்த முடியும். ஆனால் சாட்சிகள் இல்லாது சட்டத்தின் முன் எவ ரையும் நிறுத்தமுடியாது. எமக்கான பாது காப்பும் இல்லை. அத்துடன் பொலிஸா ரும், கிராம அலுவலரும் ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.
ஆயினும் அந்தக் கருத்தை நிராகரித்த பிரதேச செயலர், இந்த விடயத்தில் கிராம அலுவலரின் பங்கு சிறிது. கனியவளத் திணைக்களத்துக்கே முழுமையான பொறுப்பு அல்லது கடமை உள்ளது. சட்ட விரோத மண் அகழ்வு நடந்தால் அதைத் தடுக்கும் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும் அதிகாரம் கனியவளத் திணைக்களத்துக்கு இருக்கின்றது. நடவ டிக்கை எடுக்கவேண்டும் என்று நாம் கடி தம் அனுப்பினால் பொலிஸாரிடம் முறை யிடுங்கள் என்று எமக்குப் பதில் கடிதம் எழுதுகின்றீர்கள். எமக்கு எழுதும் கடி தத்தை நீங்கள் ஏன் பொலிஸாருக்கு எழுதி நடவடிக்கை எடுக்க முடியாது? அது உங்களுக்குரிய பொறுப்பு என்று சுட்டிக் காட்டினார்.
இந்த விடயத்தில் கருத்துத் தெரிவித்த பிர தேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், அந்தப் பகுதி மக்கள் ஆதாரம் தருகின்ற னர், பிரதேசசபையும் ஒத்துழைப்புத் தரு கின்றது, பொலிஸாரும் தமக்குரிய பங்க ளிப்பைச் செய்கின்றனர். சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அந்தத் துறைசார்ந்த திணைக்களத்துக்கே உள்ளது. அதனால் கனியவளத் திணைக்களம் தனது பொறுப்பை அடுத்தவர் மீது சுமத்தாது, சட்டவிரோத மண் அகழ்வைக் கட்டுப்ப டுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். எதிர் வரும் ஜனவரி மாத முற்பகுதிக்குள் நட வடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (அ-எ-27)

## பண்டிகைக்...

மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவ தற்காக வழிபாட்டு இடங்கள், முன்னணி ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத்தளங் களில் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.
புத்தாண்டு கொண்டாட்டத்துக்காக மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் வணிக வளா கங்கள், அதிக போக்குவரத்து நெரிசல் உள்ள நகரங்கள் உட்பட முக்கியமான நகரங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும், பொலிஸ்மா அதிப ரால் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இந்தக் காலப்பகுதியில் போக்குவரத்து விதிமுறை மீறல் உட்பட போக்குவரத்துக் குற்றங்களை கண்காணிப்பதற்குரிய சிறப்பு வேலைத்திட்டமும் முன்னெடுக்கப் பட்டுவருகின்றது.
பாதுகாப்பு நடவடிக்கையின்போது தேவை யேற்படும்பட்சத்தில் பொலிஸாருக்கு உத வுவதற்கு இராணுவம் தயாராக உள்ளது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரி வித்தார் என ஆங்கில நாளிதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
மேல்மாகாணத்தில் மட்டும் சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கு 2 ஆயி ரத்து 500 கூடுதல் பொலிஸார் களமிறக் கப்பட்டுள்ளனர். அதேபோல கண்கா ணிப்பு நடவடிக்கைக்காக புலனாய்வாளர் களும் ஈடுபடுத்தப்படவுள்ளனர். சிவில் உடையில் பொலிஸாரும் ரோந்து நடவடிக் கையில் ஈடுபடக்கூடும்.
நத்தார் வழிபாடுகள் இடம்பெறும் நாட்டி லுள்ள அனைத்து கத்தோலிக்க தேவா லயங்களுக்கும் சிறப்பு பாதுகாப்பு வழங்கப் படுகின்றது. பண்டிகை காலம் முழுவதும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இராணுவத் தலைமைய கத்தில் சிறப்புச் செயற்பாட்டு அறை நிறு வப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டு மையம் பண்டிகைக் காலம் முடியும்வரை செயற்படும்.
முப்படைகளுக்கும் பொலிஸாருக்கும் இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத் தும் வகையில் இந்தப் பிரிவு செயற்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள் ளது. (அ-எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

# கிரைட்டா துன்பேர்க் பிரிட்டனில் கைது!

### உலக நாடுகள் அதிர்ச்சி



**லண்டன், டிசெ. 25**

**உலகளாவிய சுற்றுச்சூழல் செயற்பாட்டாளரான கிரைட்டா துன்பேர்க், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் லண்டனில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.**

பிரிட்டனின் தலைநகர் லண்டனில், பலஸ்தீன ஆதரவுப் போராட்டமொன்று நேற்று இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தபோதே, அவர் பிரிட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிரிட்டனால் தடைசெய்யப்பட்டுள்ள பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாக பதாகை வைத்திருந்த காரணத்தால் அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

எனினும், கிரைட்டா துன்பேர்க் கைதுசெய்யப்பட்டமைக்கு உலகளாவிய மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. பலஸ்தீனக் கைதிகளுக்கும், பலஸ்தீன மக்களுக்கும் நீதியைக் கோரும் போராட்டங்களை, உலக நாடுகள் பயங்கரவாத ஆதரவு நிலைப்பாடாகப் பார்க்கக்கூடாது என்றும் அந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. காஸாவில் இஸ்ரேல் இனப்படுகொலைகளில் ஈடுபட்டுவருகின்றது என்று துன்பேர்க் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றார். இஸ்ரேலின் முற்றுகையை மீறி, காஸாவுக்குள் இரு தடவைகள் நுழைய முற்பட்ட அவரை, இஸ்ரேல் இடைமறித்துத் திருப்பி அனுப்பியமை குறிப்பிடத்தக்கது. (ம)



# கிறீன்லாந்தை அமெரிக்கா நிச்சயமாகக் கைப்பற்றும்!

### அதிபர் ட்ரம்ப் விடாப்பிடி

வொஷிங்டன், டிசெ. 25

**அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக் காரணங்களுக்காக, கிறீன்லாந்துப் பகுதியைக் கைப்பற்றியே தீருவோம் என்று அதிபர் ட்ரம்ப் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற நாள்முதல், உலக நாடுகளை வரிகளாலும், சர்ச்சைக்குரிய அறிவிப்புகளாலும் ட்ரம்ப் தொடர்ந்து அச்சுறுத்திவருகின்றார். இதன் ஒரு பகுதியாக, கிறீன்லாந்தை அமெரிக்கா 'தனதாக்கும்' எனத் தெரிவித்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார். இதையடுத்தே, கிறீன்லாந்தைக் 'கைப்பற்றுவது' உறுதி என்று மீண்டும் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்புக்கும், உலகின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் கிறீன்லாந்து மீதான கட்டுப்பாட்டை அமெரிக்கா கொண்டிருப்பது அவசியம். எனவே, கிறீன்லாந்தை அமெரிக்காவிடம் ஒப்படைப்பது குறித்து டென்மார்க் சிந்திக்க வேண்டும். அதுவே இரண்டு நாடுகளின் நலன்களுக்கும் சிறப்பானதாக அமையும் என்று ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த சர்ச்சைக்குரிய அறிவிப்புகளைத் தொடர்ந்து, கிறீன்லாந்து பகுதிக்காக விசேட தூதுவர் ஒருவரையும் ட்ரம்ப் நியமித்துள்ளார். அதிபர் ட்ரம்பின் இந்தச் செயற்பாடுகளுக்கு டென்மார்க் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (ம)

# எடப்பாடியிடம் இருந்து கட்சி கைப்பற்றப்படும்

### ஓ.பி.எஸ். திட்டவட்டம்



சென்னை, டிசெ. 25

அ.தி.மு.க.வின் தலைமைப் பதவி, எடப்பாடி பழனிச்சாமியிடம் இருந்து நிச்சயம் பறிக்கப்படும் என்று தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட பின்னர், அந்தக் கட்சியில் மீண்டும் இணைவதற்கு பன்னீர்செல்வம் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டார். எனினும், எந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இதையடுத்தே, எடப்பாடி பழனிச்சாமியிடம் இருந்து, கட்சியின் தலைமைப் பதவி கைப்பற்றப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

எம்.ஜி.ஆரின் காலத்திலும், ஜெயலலிதாவின் காலத்திலும் அ.தி.மு.க. கம்பீரமாக இருந்தது. ஆனால் இன்று, குரங்கின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட மாலையாக மாறிவிட்டது. கட்சியின் கட்டுக்கோப்பையும், பெருமையையும், கம்பீரத்தையும் எடப்பாடி பழனிச்சாமி அழித்துவிட்டார். அவர் தலைமைப் பதவிக்குத் தகுதியற்றவர் என்றும் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

எடப்பாடி பழனிச்சாமியிடம் இருந்து கட்சியைக் கைப்பற்றியே தீருவோம். அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. எடப்பாடி பழனிச்சாமிக்கு விரைவில் தக்க பாடம் புகட்டப்படும் என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)



# கொழும்பு மாநகரசபை பாதீடு அடுத்த அமர்வில் நிறைவேறும்

### அமைச்சர் நளிந்த நம்பிக்கை

கொழும்பு மாநகரசபையின் வரவு - செலவுத் திட்டம் அடுத்த முறை நிறைவேறும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ நம்பிக்கை வெளியிட்டார்.

கொழும்பு மாநகரசபை முடிவானது முழு நாட்டுக்கும் தாக்கம் செலுத்தப்போவதில்லை.

கொழும்பு மாநகரசபையின் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் அது மீள முன்வைக்கப்படும். கொழும்பு மாநகரசபை இனி எங்கள் வசம் என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் எம்.பி. கூறுகின்றார். உள்ளாட்சிசபைத் தேர்தல் சட்டத்தில் அவ்வாறு எவ்வித ஏற்பாடும் இல்லை.

விரைவில் மீண்டும் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படும். அதனை நிறைவேற்றுவதற்கு எதிரணி ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



# உறுதிமொழிகள் காற்றில் பறப்பு!

### ஐ.ம.சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு,டிசெ.25

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த இரண்டு பூரணை தினங்களுக்குள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கவிழும்.

இந்த அரசாங்கம் சிறந்தது எனக் கூறுவோர் சோற்றுக்குப் பதிலாக புல்லையே உண்கின்றனர் போலும்.

பொய்களால்தான் இந்த அரசாங்கம் நாட்டை ஆள்கின்றது என்பது பெரும்பாலான மக்களுக்கு தெரியும். எனவே இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நாட்டு மக்கள் அணிதிரள்வார்கள் - என்றார். (ச-44)

# இலங்கை மற்றும் எகிப்து இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு விரிவாக்கம்

கொழும்பு, டிசெ.25

இலங்கை எகிப்து ஆகிய நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதற்கு இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான எகிப்து தூதுவருக்கும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர் என பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை பிரதிபலிக்கும் வகையில் முக்கிய விடயங்கள் தொடர்பாக இதில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. (எ-44)

குழுநிலை வகுப்புக்கள்

- தமிழ் மொழியும் இலக்கியமும் (தரம் 6-11)
- தமிழ் இலக்கிய நயம் (10,11)
- இலக்கண இலக்கிய வகுப்புக்கள்
- வினாத்தாள் வகுப்புக்கள்
- அலகுப் பரீட்சைகள்
- தவணைப் பரீட்சைகள் நடைபெறும்.
- ஆரம்பக் கல்வி வகுப்புக்கள் (தரம் 1,2,3,4,5)

ஆசிரியர் S.ரகுபதி

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 077 938 9478

(CS 60265) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.